# DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC. 145 of 2021 |
| Prosecution Witness | : | PW5 |

02.06.2026

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : கலையரசன் | Calling | : | கூட்டுறவு சொசைட்டி |
| Father Name | : பழனியாண்டி | Age | : | 28 |
| Village | : மண்பறை | | : | |
| Taluk | : முசிறி | | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மண்பறையில் வசித்து கூட்டுறவு சொசைட்டியில் வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான்.கடந்த 08.02.2020 ம் தேதி காலை 8.00 மணியளவில் நானும் பிரசாந்த் என்பவரும் தெற்கு தெருவில் உள்ள சாரதி வீட்டின் அருகே நின்று பேசிக்கொண்டிருந்த போது போலீசார் வந்து சம்பவ இடத்தைபார்வையிட்டு படம் வரைந்து எழுதிக் கொண்டார்கள்.

அந்த பார்வை மகஜரில் நானும் பிரசாந்த் என்பவரும் சாட்கியாக கையொப்பம் செய்தோம். பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆகவும், பார்வை மகஜர் **அ.சா.ஆ.3** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்பு அன்றைய தினம் காலை 8.30 மணியளவில் சாரதியின் வீட்டில் இருந்து சமையல் சில்வர் பொவுனி

ஒன்று, சில்வர் தட்டு ஒன்று, சில்வர் சொம்பு, சாப்பிடும் சில்வர் தட்டு அனைத்தும் நெழிந்த நிலையில் இருந்ததை போலீசார் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார்கள். அதில் நானும் பிரசாந்த் என்பவரும சாட்சியாக கையொப்பம் செய்தோம். கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.4** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் ஏற்கனவே அ.சா.1ன் மூலமாக அ.சா.பொ.1 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

நான் முசிறி தாலூக்கா மண்பறையை சேர்ந்தவர். அ.சா.1 எனது அக்கா. எதிரி மனோகரன் எனது அக்காவின் கணவரின் அண்ணன் ஆவார். சாரதி என்பவரின் வீடு யார் பேரில் உள்ளது என்றால் செந்தில் குமார் என்பவர் பேரில் உள்ளது . அவருக்கு தானம் செட்டில் மெண்ட் எழுதிக்கொடுத்துவிட்டார்கள். அந்த தான செட்டில்மெண்டை நான் படித்து பார்த்து விட்டு சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. அதை நான் படித்து பார்க்கவில்லை. சம்பவ நடந்த நாள் அன்று எனது அக்கா கணவர் செந்தில் குமார் அங்கு இல்லை என்று சொன்னால் சரிதான். நான் எனது பெற்றோருடன் மண்பறையில் தான் வசித்து வருகீறேன் என்று சொன்னால் சரிதான். என்னை சாட்சியம் அளிக்க போன் மூலமாக செல்வமணி என்ற காவலர் அழைத்தார்.

அழைப்பாணை எதுவும் சார்வாகவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னை 08.02.2020 ம் வருடம் விசாரித்த போலீசார் பெயர் மற்றும் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் துறையூர் போலீசார் என்னை விசாரித்தார்கள். எத்தனை வாகனத்தில் வந்தார்கள் என்றால் 1 வாகனத்தில் தான் வந்தார்கள். நான் சம்பவ இடத்தில் வரைபடத்தில் உள்ள

கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய திசைகளில் யார் வீடுகள் உள்ளது என்பதை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தெற்கு திசையில் கருப்பு கோவிலும் குழந்தைவேல் என்பவரது வீடும் உள்ளது. கருப்பு கோவிலுக்கும் குழந்தைபேல் வீட்டிற்கும் நடுவில் வேப்பமரம் ஒன்று உள்ளது. வடக்கு திசையில் வினோதா என்பவரது வீடு உள்ளது. மேற்கு திசையில் தேச கௌவுண்டர் என்பவரது வீடு உள்ளது. கிழக்கு சிமெண்ட் ரோடு மற்றும் வீரமலை என்பர் வீடு உள்ளது. மேற்படி விவரங்களை போலீசார் விசாரணையின் போது சொன்னேனா என்றால் சொன்னேன்.

நான் சொன்னவுடன் அவற்றை எழுதிக்கொண்டு என்னிடம் படித்து காண்பித்து கையொப்பம் வாங்கி கொண்டார்கள். நெழிந்த நிலையில் இருந்த சமையல் சில்வர் பொவுணி, சில்வர் தட்டு, சில்வர் சொம்பு, சாப்பிடும் சில்வர் தட்டு பெயர் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் பெயர் இருந்ததா என்று நான் பார்க்கவில்லை. நான் அ.சா.1ன் தம்பி என்பதால் அதை அனுசரித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1வது எதிரிக்கும் அ.சா.2கும் சொத்து பிரிப்பது சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சனையில் அ.சா.1 பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் எதிரிகள் மீதுஉரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் அ.சா.1 கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று

சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கு இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

ஒப்பம்/–R.சுரேஷ் குமார்,
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
துறையூர்.